பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை
ரூபா
5-00

மலர்: 8 திருவள்ளுவர் ஆண்டு 2024 ஆவணி 3 வியாழக்கிழமை (19 08-1993) UTHAYAN —A Lively National Tamil Daily இதழ் 264

# கைதிகள் பரிமாற்றம் குறித்து அரசு புலிகளின் பதிலை எதிர்பார்க்கிறது!

## நேற்று நாடாளுமன்றத்தில் தகவல்

கொழும்பு, ஆகஸ்ட் 19

கைதிகள் பரிமாற்றம் தொடர்பாக அரசு புலிகளின் பதிலை எதிர்பார்த்திருப்பதாக நேற்று நாடாளுமன்றத்தில் அரசுத் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

''விடுதலைப் புலிகளின் காவலில் உள்ள யுத்தக்கைதிகளை விடுவிக்க அரசு எடுத்துள்ள புதிய நடவடிக்கை என்ன? வடக்கு - கிழக்கில் செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவின் செயற்பாடுகள் பற்றி அரசு உடனடியாக விசாரணை நடத்தவேண்டும்'' — என்று சுதந்திரக் கட்சி எம். பியான நிமால் சிறிபால டி சில்வா கேட்ட கேள்வி ஒன்றுக்கு அமைச்சர் விமல் விக்கிரமசிங்க பதிலளித்தார்.

அப்போது அமைச்சர் தெரிவித்ததாவது:-

விடுதலைப் புலிகளின் காவலில் உள்ள போர்க் கைதிகளை விடுவிப்பதற்கு அரசு

(6 ஆம் பக்கம் பார்க்க)

## நகர பகுதியில் புக்காரா வட்டமிட்டது

யாழ்ப்பாணம், ஆக. 19

நேற்று நண்பகல் யாழ்நகரப் பகுதியை மையமாக வைத்து புக்காரா விமானம் ஒன்று வட்டமிட்டுச்சென்றது.

அதேசமயம் பலாலி விமான நிலையத்தில் விமானங்கள் அடிக்கடி தரையிறங்கிச் சென்றதை அவதானிக்கக் கூடியதாக இருந்தது. (இ-162)

## மட்டுநகரில் புதிய முகாம்

யாழ்ப்பாணம், ஆக 19

மட்டக்களப்பு மாநகர சபைக் கட்டடத்தில் முகாம் அமைக்கும் முயற்சியில் விசேட அதிரடிப் படையினர் ஈடுபட்டுள்ளனர்.

அக்கட்டடத்தில் பணியாற்றும் ஊழியர்களை அங்கிருந்து வெளியேறுமாறு படையினர் பணித்துள்ளனர் (உ-3)

## "இதயபூமி-1" வெற்றி நாள் ஆகஸ்ட் 25 ஆம் திகதி

விடுதலைப் புலிகளினால் மணலாறு மண்கிண்டிமலை முகாம் தகர்க்கப்பட்ட "இதயபூமி - 1" வெற்றி நாள் இம்மாதம் 25 ஆம் திகதி கொண்டாடப்பட உள்ளது.

"ஆகஸ்ட் 25 இதயபூமி வெற்றி நாள்" என்று எழுதப்பட்ட பதாகைகள் போக்குவரத்துச் சேவையில் ஈடுபட்டுள்ள வாகனங்களில் தொங்க விடப்பட்டுள்ளன.

மண்கிண்டிமலை முகாம் தாக்குதலின்போது 70 க்கும் அதிகமான படையினர் கொல்லப்பட்டதும் 5 கோடி ரூபாவுக்கு மேல் பெறுமதியான நவீன ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டதும் தெரிந்தவையே.

கடந்த பத்தாண்டுகால தமிழீழப் போரில் விடுதலைப் புலிகளுக்குக் கிடைத்த பெரிய வெற்றியாக மண்கிண்டிமலை முகாம் தகர்ப்பை தென்னிலங்கைப் பத்திரிகைகள் வர்ணித்திருந்தன. (இ-51-162)

# யாழ். நகரக் குடியிருப்புகளை நோக்கி மண்டைதீவு முகாமிலிருந்து ஷெல் வீச்சு!

## நால்வர் காயம்; கரையோரப் பகுதி மக்கள் இடம்பெயர்வு

யாழ்ப்பாணம், ஆக. 19

மண்டைதீவில் நிலைகொண்டுள்ள இராணுவத்தினர், யாழ். நகரின் கரையோரங்களில் உள்ள குடியிருப்புப் பகுதிகளை நோக்கி நேற்று ஷெல் தாக்குதல்களை நடத்தினர்.

கொட்டடி, கொழும்புத்துறை, குருநகர் ஆகிய இடங்களில் ஷெல்கள் விழுந்து வெடித்தன.

குருநகர் மவுண்கார்மல் வீதியில் நேற்றுக் காலை விழுந்து வெடித்த இரு ஷெல்களினால் இரு வீடுகள் சேதம் அடைந்தன.

கொட்டடியில் விழுந்த ஷெல்களால் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் உட்பட நால்வர் காயம் அடைந்தனர்.

மற்றும் கொழும்புத்துறை துண்டி ஆகிய இடங்களிலும் ஷெல்கள் விழுந்து வெடித்தன.

இத்தாக்குதல் காரணமாக கரையோரப் பகுதி மக்கள் பலர் இடம்பெயர்ந்து பாதுகாப்பான இடங்களுக்குச் சென்றனர்.

இடம்பெயர்ந்த மக்கள் சென். பற்றிக்ஸ் கல்லூரி, புனித யாகப்பர் ஆலயம், அடைக்கல மாதா ஆலயம் ஆகியவற்றில் தங்கி இருந்தனர்.

கொட்டடியில் வீழ்ந்த

(6 ஆம் பக்கம் பார்க்க)

## மன்னாரில் 5 மைல் நீள பகுதியில் மட்டும் படையினர்

யாழ்ப்பாணம். ஆக. 19

மன்னார் மாவட்டத்தில் மாந்தையில் இருந்து சிறுநாவல்குளம் ஊடாக வவுனியா காலை வரையிலான ஐந்து மைல் நீளமான பிரதேசத்தில் மட்டும் படையினர் தற்போது நிலை கொண்டுள்ளனர்.

சுமார் 20 மைல் நீளப் பிரதேசத்தில் அமைந்திருந்த

(6 ஆம் பக்கம் பார்க்க)

## சென்னைக் குண்டு வெடிப்பு புலிகளுக்குத் தொடர்பாம்!

சென்னை, ஆக. 19

சென்னையில் உள்ள இந்து மத தீவிர அமைப்பின் (ஆர். எஸ். எஸ்ஸின்) அலுவலகத்தில் நடந்த குண்டு வெடிப்பு சம்பவத்தில் விடுதலைப்புலிகள் அமைப்புக்கும் தொடர்பு உள்ளது.

— இவ்வாறு ஜனதா கட்சித் தலைவர் சுப்பிரமணிய சுவாமி நேற்று செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

சென்னையில் கடந்த 8 ஆம் திகதி இடம்பெற்ற குண்டுவெடிப்பில் பாகிஸ்தானின் ஐ. எஸ். ஐ அமைப்புக்குத்தொடர்பு உண்டு என விசாரணைகளில் தெரிய வந்துள்ளது. இந்த ஐ. எஸ். ஐ. அமைப்புக்கும், புலிகள் அமைப்புக்கும் ஏற்கனவே தொடர்புகள் உள்ளன. எனவே இந்த குண்டுவெடிப்பில் புலிகள் இயக்கமும் சம்பந்தப்பட்டுள்ளது — என்றார் அவர்.

மேற்படி குண்டுவெடிப்புச் சம்பவத்தில் 11 பேர் மரணமாகினர் என்பது தெரிந்ததே. (உ-9)

## நல்லூர் ஆலயத்துக்கு சமீபமாகவும் ஷெல்

மண்டைதீவு இராணுவ முகாமில் இருந்து ஏவப்பட்டதாகக் கருதப்படும் ஷெல் ஒன்று நேற்று நல்லூர் கந்தசாமி கோவிலுக்குச் சமீபமாகவும் வீழ்ந்து வெடித்தது.

நேற்றுப் பகல் 1.00 மணி அளவில் இடம் பெற்ற இந்த ஷெல் தாக்குதலின் போது தெய்வாதீனமாக உயிர்ச் சேதமோ அல்லது பெரிய அளவில் உடைமைச் சேதமோ ஏற்படவில்லை. வெற்றுக் காணி ஒன்றிலேயே இந்த ஷெல் வீழ்ந்து வெடித்தது.

இதனால் இந்தக் காணிக்கு அருகில் இருந்த வீடு ஒன்று சிறிது சேதம் அடைந்தது.

இந்தச் சம்பவம் இடம் பெற்ற போதிலும் நேற்று மாலை பூங்காவன த்திருவிழாவில் ஆயிரக்கணக்கில் பக்தர்கள் கலந்து கொண்டனர். (இ-11,-3)

## புலிகள் ஷெல் தாக்கு

யாழ்ப்பாணம், ஆக. 19

மண்டைதீவு சந்தியில் நிலைகொண்டுள்ள இராணுவத்தினரின் காவலரண் மீது நேற்றுக் காலை 6.30 மணி அளவில் விடுதலைப் புலிகள் ஷெல் தாக்குதல் நடத்தியதாக "புலிகளின் குரல்" வானொலி தெரிவித்தது.

படையினருக்கு ஏற்பட்ட சேத விபரங்கள் எதுவும் தெரியவரவில்லை. (இ-5)

## ரயில் மோதி 4 மாணவர் பலி

சென்னை, ஆக. 19

சென்னை நகரில் நேற்று மின்சார ரயில் ஒன்று மோதி நான்கு கல்லூரி மாணவர்கள் உயிரிழந்தனர் என்று அறிவிக்கப்படுகின்றது.

ரயில்பாலம் ஒன்றின் மீதாக இம் மாணவர்கள் நடந்து சென்று கொண்டிருந்தபோது தாம்பரம் நோக்கிச் சென்று கொண்டிருந்த மின்சார ரயில் ஒன்று இவர்கள் மீது மோதியது. (உ-எ)

## மரினால் புறப்பட்டது

வடமராட்சி, ஆக. 19

பருத்தித்துறை துறைமுகத்தில் பொருள்களை இறக்கிய பின் மரினால் கப்பல் நேற்றுப் பிற்பகல் [illegible] பட்டுச் சென்றது. [illegible]

# வடக்கு-கிழக்கு மாகாணத்துக்கு இடைக்கால நிர்வாக சபை!

## அரசுத் தரப்பில் முயற்சி?

கொழும்பு, ஆக. 19

வடக்கு—கிழக்கு மாகாண சபைக்கு இடைக்கால நிர்வாக சபை ஒன்றை அமைக்கும் முயற்சியில் அரசுத் தரப்பு ஈடுபட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இது பற்றிய ஆலோசனை ஒன்றை சபாநாயகர் எம். எச். முஹம்மது அரசியல் கட்சிகளின் தலைவர்களுக்கு அனுப்பி வைத்திருப்பதுடன் இது தொடர்பாக அவர்களின் கருத்தையும் கோரியிருக்கிறார்.

ஈ.பி.டி.பி. அமைப்பும் முஸ்லிம் காங்கிரஸ் கட்சியுமே

[6 ஆம் பக்கம் பார்க்க]

# இடைக்கால சபை யோசனை: விடுதலைப் புலிகள் நிராகரிப்பு

லண்டன், ஆக.19

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் மீண்டும் மாகாண சபையை அமைப்பது என்ற யோசனையை விடுதலைப்புலிகள் நிராகரித்துள்ளனர்.

விடுதலைப்புலிகளுக்கு எதிரான தமிழ்க் குழுக்களை இந்த மாகாணசபை அமைப்பில் இடம்பெறச் செய்து, இவர்களின் உதவியுடன் இராணுவநடவடிக்கையைத் தீவிரப்படுத்துவதே இலங்கை அரசின் உள்நோக்கம் என்று பாரிஸில் உள்ள விடுதலைப் புலிகள் பேச்சாளர் திரு. லோறன்ஸ் திலகர் தெரிவித்துள்ளார். (உ-எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சென்னை குண்டு வெடிப்பு:
# ஆர்.டி. எக்ஸ். வெடிமருந்தே பயன்படுத்தப்பட்டது!

சென்னையில் ஆர். எஸ். எஸ். தலைமையகத்தை குண்டு வைத்துத் தகர்த்த சம்பவத்தில் ஆர். டி. எக்ஸ் வெடிமருந்து பயன்படுத்தப் பட்டதாக பொலீஸ் விசாரணைகளில் இருந்து தெரிய வந்துள்ளது.

இது தொடர்பாக இரண்டு நபர்களை பொலீஸார் தேடி வருவதாகவும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

இதனிடையில்— இச்சம்பவத்தில் ஈடுபட்டதாகச் சந்தேகிக்கப்படும் நபர்கள் பற்றி துப்புக் கொடுப்பவர்களுக்கு 5லட்சம் ரூபா சன்மானம் வழங்கப்படும் என்று முதலமைச்சர் ஜெயலலிதா அறிவித்துள்ளார். (ஓ-எ)

## முஸ்லீம்களின் 34 வீடுகள் தீக்கிரை!

பொலன்னறுவை மாவட்டம் — மாணிக்கப்பிட்டியில் முஸ்லிம் அகதிகள் வசித்து வந்த 34 தற்காலிக வீடுகள் தீக்கிரையானதாக அறிவிக்கப்படுகிறது.

மண்ணெண்ணெய் விளக்கு ஒன்றே இந்த தீவிபத்துக்குக் காரணம் என்று அந்த மாவட்ட அரச அதிபர் தெரிவித்தார்— இவ்விபத்தில் உயிர்ச்சேதம் எதும் ஏற்படவில்லை.

# சுகாதாரம் பேணுமாறு பேக்கரிக்கு எச்சரிக்கை

பேக்கரி உரிமையாளர்கள் சுகாதாரத்தைப் பேணவேண்டும் என்று எச்சரிக்கப்பட்டுள்ளது.

நவக்கிரிப் பகுதியில் உள்ள பேக்கரி ஒன்றில் சுகாதாரச் சீர்கேடானமுறையில் பாண் உற்பத்தி செய்யப்பட்டது கண்டுபிடிக்கப்பட்டு, வடபிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பகுதியைச் சேர்ந்த உணவு சுகாதாரப் பரிசோதகரால் எச்சரிக்கப் பட்டுள்ளது.

பிரஸ்தாப பேக்கரியின் பாண் தயாரிக்கும் பகுதிக்குச் சமீபமாக மாடு ஒன்று கட்டப்பட்டிருந்ததாம். (இ-162)

## யேகோவாவின் சாட்சிகள் மாநாடு

யாழ்ப்பாணம், ஆக. 19

யேகோவாவின் சாட்சிகளின் மாவட்ட மாநாடு இன்று வியாழக்கிழமை தொடக்கம் 22ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வரை சாவகச்சேரியில் பேரம்பலம் வீதி பெரியமாவடியில் அமைந்திருக்கும் ராஜ்ய மண்டபத்தில் நடைபெறும் (ச)

## குமணவில் குளோறின்

யாழ்ப்பாணம், ஆக. 19

தற்போது பருத்தித் துறைக்கு வந்துள்ள குமண கப்பலில் வடபிராந்திய சுகாதாரத் திணைக்களத்துக்கு 50 பரல்கள் குளோறின் தொற்று நீக்கி எடுத்து வரப்பட்டுள்ளது. (இ-162)

## அழைப்பு

வலிகாமம், வடமராட்சி, தென்மராட்சியைச் சேர்ந்த ஒலி, ஒளி அமைப்பு உரிமையாளர்களை இன்று காலை 10 மணிக்கு தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் துறையின் கோண்டாவிலில் உள்ள யாழ். மாவட்டச் செயலகத்துக்கு வருகை தருமாறு யாழ். மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் திரு. இளம்பரிதி கேட்டுள்ளார்.

o o o

பளை உட்பட யாழ். மாவட்ட கிராம சேவையாளர்கள் அனைவருக்குமான கலந்துரையாடல் இன்று பிற்பகல் 3 மணிக்கு கோண்டாவிலில் உள்ள யாழ். மாவட்ட அரசியல்துறைச் செயலக மண்டபத்தில் நடைபெறும். இக் கலந்துரையாடலில் அனைத்து கிராம சேவையாளரையும் சமுகம் தருமாறு பொது நிர்வாகத் தொடர்பக இணைப்பாளர் கேட்டுள்ளார் (உ)

ஸ்ரீ வசந்த நாகபூஷணி அம்மன் துணை



ஏழாலை தெற்கு - களபாவோடை - வசந்தபுரம்

## ஸ்ரீ வசந்த நாகபூஷணி அம்மன் தேவஸ்தானம்

மேற்படி தேவஸ்தானத்தில் நிகழும் இலவச சேவைகளைப் பெற விரும்புவோருக்கான

## பெயர்களைப் பதிவு செய்தல் [விண்ணப்பித்தல்]

[21 - 8 - 93, 22 - 8 - 93 சனி, ஞாயிறு தினங்களில் பிற்பகல் 2 மணி முதல் 6 மணி வரை நேரில் தேவஸ்தானத்தில் பெயர்களைப் பதிவு செய்து கொள்ளலாம்.]

1. கை, கால்கள் இழந்தோர் / ஊனமுற்றோர் விவரம்
2. கண் பார்வை இழந்தோர் விவரம்
3. க. பொ. த. (சா/த), (உ/த) தமிழ், சமய பாட வகுப்பில் பயில விரும்புவோர் விவரம்
4. பண்ணிசை / பஞ்சபுராணம் ஓதுதற் பயிற்சியில் சேர விரும்புவோர் விவரம்

நிகழ்த்துபவர்: "திருநெறிய தமிழிசையரசு" "பண்ணிசைப் புலவர்" "சங்கீத பூஷணம்"

நயினை. நா வி. மு. நவரெத்தினம் அவர்கள்
(தலைவர், பண்ணிசைத்துறை, யாழ். பல்கலைக் கழகம்)

### தற்போது நிகழும் சேவைகள்

✶ ஆலய பராமரிப்பில் உள்ள குழந்தைகளுக்கான இலவச மருத்துவ சேவைகள்

✶ செவ்வாய், வெள்ளி தோறும் சமய அறிவுப் போட்டிகள் - பரிசளிப்பு

நிகழ்த்துபவர்: 'அருள்மொழிச்செல்வர்', 'வாகீசகலாநிதி' கனகசபாபதி நாகேஸ்வரன் எம். ஏ அவர்கள்

✶ தெய்வீகப் பேருரைகள்

திங்கள் — பி. ப. 3 மணி 'சிவஞானதுரந்தரர்' 'செஞ்சொற்கொண்டல்' எம். எஸ் ஸ்ரீதயாளன் B.A., I S.A, (தமிழ்) அவர்கள்

செவ்வாய் — காலை 9.30 மணி 'அருள்மொழிச்செல்வர்', வாகீசகலாநிதி' கனகசபாபதி நாகேஸ்வரன் M.A. அவர்கள்

வெள்ளி — பி. ப. 3 மணி: 'சொல்மொழிவேந்தன்', தமிழருவி' த. சிவகுமாரன் அவர்கள்

ஞாயிறு — காலை 9.30 மணி: சைவப்புலர் வ. குமாரசாமி அவர்கள்

குறிப்பு: இலவச சேவைகள் திட்டத்தில் இணைந்து பங்களிப்புச் செய்ய விரும்பும் வைத்திய கலாநிதிகள், ஆசிரியர்கள், பல்கலைக் கழக விரிவுரையாளர்கள் ஸ்ரீ வசந்தநாகபூஷணி அம்மன் தேவஸ்தானத்துடன் தொடர்பு கொள்ளவும்.

இவ்வண்ணம்
ஸ்ரீவசந்த நாகபூஷணி அம்மன் தேவஸ்தானம்

ஸ்ரீவசந்த நாகபூசணி அம்மன் தேவஸ்தானம்,
களபாவோடை,
ஏழாலை தெற்கு,
ஏழாலை.

(இ-5805)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

## மகாபொலக் கொடுப்பனவு 8ஆம் தவணைப் பணம்

பல்கலைக்கழக மாணவர்களுக்கான 8ஆம் தவணை மகாபொலக் கொடுப்பனவு 19 08 93 முதல் பல்கலைக்கழகத்தில் அமைந்துள்ள மக்கள் வங்கி நவீன சந்தைக் கிளையில் வழங்க ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இக்கொடுப்பனவுகள் பற்றிய முழுவிபரங்களும், அறிவுறுத்தல்களும் பல்கலைக்கழக விளம்பரப் பலகையில் இடப்பட்டுள்ளன. இதற்கமைவாக கொடுப்பனவை உரித்துடைய மாணவர்கள் பெற்றுக் கொள்ளுமாறு கேட்கப்படுகின்றனர்.

பதிவாளர்.
(இ-5804)

கோண்டாவில் - இணுவில் மஞ்சத்தடி

## அருணகிரிநாத சிவசுப்பிரமணிய சுவாமி கோயில்

அருள்மிகு அரசோலை விநாயகர்

# ஏகதின லட்ஷ அர்ச்சனை கணபதி ஹோமம்

காலம்: ஸ்ரீமுக வருஷம் ஆவணி மாதம் 3ஆம் நாள் வியாழன், 4ஆம் நாள் வெள்ளி (19, 20-08-1993)

20 — 08 — 1993 வெள்ளி பிற்பகல் பஞ்சமுக அர்ச்சனை நடைபெறும்.

இரவு 7மணி தெய்வீக சொற்பொழிவு
அளவையூர் அருட்கவி சி. விநாசித்தம்பி அவர்கள்

✶ கணபதியும் காவிரியும் ★
என்னும் விடயம் பற்றி

★ விசேட மேளக் கச்சேரி.
இ. சண்முகராசா
கே. ஆர். சுந்தரமூர்த்தி குழுவினர், இணுவில்.

மஞ்சத்தடி,
இணுவில்.
— விழா உபயகாரர்கள்.
(26974)

# உதவித்தாதியர் பயிற்சி விண்ணப்பம்

தேசிய பயிலுநர் கைத்தொழில் பயிற்சி அதிகார சபையின் அனுசரணையுடன் செல். ஜோண் அம்புலன்ஸினால் நடத்தப்படும் உதவித் தாதிகள் பயிற்சிக்கான தேர்முகப் பரீட்சை 22 08—1993 ஞாயிற்றுக்கிழமை காலை 9 00 மணிக்கு சாயி மெடிக்கல் அக்கடமி இலக்கம்:- 10, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணத்தில் நடத்தப்படும். (யாழ். போதனா வைத்தியசாலை தாதியர் விடுதிக்கு முன்பாக)

தகைமை:- கல்வி-கணிதம், தமிழுடன் 6 பாடங்கள் சித்திபெற்றிருத்தல் வேண்டும்.

வயது:- 17 முதல் 25 வருடங்கள்

இ பயிற்சிக் காலத்தில் தேசிய பயிலுநர் சபையினரால் ஊக்குவிப்புப் பணம் வழங்கப்படும்.

பிரதேச ஆணையாளர்
செல். ஜோண் அம்புலன்ஸ்,
யாழ்ப்பாணம்.
(26993)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி

செல்வன்

## கனகரத்தினம் ஜீவகன்

(யா/மயிலணி சைவ மகா வித்தியாலய 1 ஆம் ஆண்டு மாணவன்)

அன்னை மடியில்: 01—08—1987
ஆண்டவன் மடியில்: 21—07—1993

அன்னம் ஊட்டிய அன்னையின் கை
ஈரம் காயும் முன்னமும்
உன்னை அணைத்த தந்தையின் கை
தளர முன்னமும்
தன்னை வணங்க இறைவன் அழைத்தனனே
விரித்த புத்தகம் மூடவில்லை
விளையாட சோதரும் தோழரும்
ஏங்குகிறார்கள்— நீயோ
இறைவனுடன் விளையாடச் சென்றனையோ

செ. கனகரத்தினம்
(தந்தை)
ஏழாலை வடக்கு.
ஏழாலை.
(6627)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனப்பிரச்சினைக்குத் தீர்வு:

# பிராந்திய நாடுகளின் ஆதரவு எமக்கு ஊக்கத்தை தருகிறது

## பிரதமர் ரணில் பேட்டி

கொழும்பு, ஆக. 19

இனப்பிரச்சினை உள்நாட்டு விவகாரமாகும். இதற்குத் தீர்வுகாண பிராந்திய உதவியை நாம் கோரவில்லை. ஆனால் இப் பிரச்சினையில் பிராந்திய அயல்நாடுகள் எமக்கு ஆதரவு அளிப்பது எமக்கு ஊக்கத்தை தருகிறது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா ''சண்டே ஒப்சேர்வருக்கு'' அளித்த பேட்டி ஒன்றில் முன்கண்டவாறு தெரிவித்தார்.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் பேச்சுகள் தோல்வியடையும் பட்சத்தில் பிராந்திய உதவி பெறப்படுமா என்ற கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் முன்கண்டவாறு கூறினார்.

### இரு பிரச்சினைகள்

நாட்டில் இரண்டு பெரிய பிரச்சினைகள் உள்ளன. ஒன்று வடக்கு - கிழக்குப் பிரச்சினை. மற்றது தென் பகுதியில் வாழ்க்கைச் செலவு உயர்வினால் ஏற்பட்டுள்ள பிரச்சினை. இந்த இரண்டு பிரச்சினைகளும் நாட்டின் அரசியல் நிலைவரத்துடன் நேரடியாகச் சம்பந்தப்பட்டவையாகும். நீண்டகால மற்றும் குறுகிய கால நலன்களைக் கருத்திற்கொண்டு உத்திகளை வகுப்பது முக்கியமானதாகும். — என்றும் பிரதமர் கூறினார்.

கேள்வி: இரண்டு பிரச்சினைகளையும் தீர்க்க புதிய உத்திகள் உண்டா?

பிரதமர்: வாழ்க்கைச் செலவு உயர்வை கட்டுப்படுத்த பணவீக்கத்தைக் கட்டுப்படுத்துவதும் மொத்த உள்ளூர் உற்பத்தியை அதிகரிப்பதுமே எமது உத்தியாகும்.

இனப்பிரச்சினை சம்பந்தப்பட்ட மட்டில் அரசு நம்பிக்கையை இழக்கவில்லை. பிரச்சினையுடன் சம்பந்தப்பட்ட அரசியல் அம்சங்கள் தொடர்பாக பல்வேறு கட்சிகளுடன் பேச்சுக்களை நடத்த தொடர்ந்தும் கதவுகள் திறந்துள்ளன.

இதேவேளை — தெரிவு செய்யப்பட்ட பகுதிகளில் சிவில் நிர்வாகத்தை ஏற்படுத்தும் முயற்சியில் படையினரும் பொலிஸாரும் ஈடுபட்டுள்ளனர். படையினருக்கு இதில் முன்னேற்றமும் பின்னடைவுகளும் ஏற்பட்டுள்ளன. (ஓ-எ)

# மேம்பாட்டுக் கழகத்தின் விவசாயப் பயிற்சி நெறி

விவசாய அபிவிருத்திக்கான பல தரப்பட்ட நடவடிக்கைகளை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகம் மேற்கொண்டு வருகின்றது இதன் ஓர் அம்சமாக காலத்திற்கு காலம் விவசாய பயிற்சிகளை வழங்கி விவசாய அபிவிருத்திக்கான ஊக்குவிப்புக்களையும் ஏற்படுத்தி வருகின்றது.

இம்மாதம் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகத்தினால் நடத்தப்பட்ட விவசாய பயிற்சியை முடித்துக் கொண்டு 30 பேர் வெளியேறியுள்ளனர்.

இப்பயிற்சிக் காலத்தின் போது ''விவசாய உள்ளீடுகளும் இன்றைய நிலையில் விவசாயிகள் எதிர்நோக்கும் பிரச்சினைகளும்'' என்ற தலைப்பில் கமநலசேவைத் திணைக்கள உதவி விவசாயப் பணிப்பாளர் திரு. ஆ. சிவசாமியும் —

''போசாக்கின்மையை இல்லாதொழிக்க புதிய பயிர்களை இனம் காணுதலும் அறிமுகப் படுத்தலும்'' என்ற தலைப்பில் விவசாய விரிவாக்க உதவி விவசாயப் பணிப்பாளர் திரு. த. சிவலோகநாதனும் —

''வட தமிழீழத்திற்கு தேவையான வருடாந்த உணவுத் தேவையும் தன்னிறைவுக்கான விவசாய உத்திகளும்'' எனும் பொருள் பற்றி யாழ். பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் திரு இ. நந்தகுமாரும் —

மற்றும் விவசாய அபிவிருத்தியுடன் தொடர்புடைய பல தரப்பட்ட கருத்துக்கள் பற்றி யாழ். பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் திரு. ப. சிவநாதன், முறைசாராக் கல்வி உதவிக் கல்விப் பணிப்பளர் திரு ச. சுப்பிரமணியம், விவசாய ஆராய்ச்சி, நிலைய பொறுப்பதிகாரி திரு. ச. பொன்னுத்துரை, விவசாய ஆராய்ச்சி அலுவலகத்தில் திரு. இ. ஈஸ்வரபட்சம், விவசாய விஸ்தரிப்பு அலுவலர் திரு. மு. சோமசுந்தரம், விவசாய விஸ்தரிப்பு பணிமனையைச்சேர்ந்த திருமதி அ. நந்தகுமரன் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழக உணவு பதனிடல் பகுதியை சேர்ந்த திரு. நகுலேஸ்வரன் ஆகியோரும் விரிவுரைகள் நடத்தினார்கள்.

# டயஸ் அகதிமுகாம் மக்கள் குடிதண்ணீர் இன்றி அவதி

அரியாலை, ஆக. 19

அரியாலையில் உள்ள டயஸ் அகதிமுகாமில் வாழும் மக்கள் போதிய குடிதண்ணீர் வசதி இன்றி அவதிப்படுகின்றனர் என்று தெரிவிக்கப் படுகிறது.

இந்த அகதிமுகாமில் 145 குடும்பங்கள் தங்கி உள்ளன.

அகதி முகாமில் உள்ள கிணறு வற்றிவிட்டதாலேயே தண்ணீர்ப் பிரச்சினை தோன்றி உள்ளது.

இம்முகாமை பராமரித்து வரும் அகதிகள் புனர்வாழ்வு கழகத்திடம் இம்முகாம் மக்கள் சில கோரிக்கைகளை விடுத்துள்ளனர்.

குடி தண்ணீர்ப் பிரச்சினையை போக்க குறைந்த பட்சம் மூன்று குழாய்க்கிணறுகளை அமைத்து தருமாறும் —

தொழிலின்றி பாதிக்கப்பட்டிருப்பதால் தொழில் ஊக்குவிப்பு பணத்தை பெற்றுத் தருமாறும் —

மலசல கூடங்கள் தற்போது பாதிக்கப்பட்டிருப்பதால் அவற்றை திருத்தி தருமாறும் —

சமையல் பாத்திரங்களை தந்து உதவுமாறும் அவர்கள் கோரியுள்ளனர். (இ-17)

# கொழும்பு கிளிநொச்சி தபால் சேவையை சீராக நடத்துவதற்கு நடவடிக்கை

கொழும்புக்கும், கிளிநொச்சிக்கும் இடையிலான வெளியூர் தபால் சேவையை வாரத்தில் 3 நாட்கள் சீராக நடத்துவதற்குரிய நடவடிக்கைகளை கிளிநொச்சி மாவட்ட அஞ்சல் அதிபர் மேற்கொண்டுள்ளார்.

இது தொடர்பான கூட்டம் ஒன்று கிளிநொச்சி அரசாங்க செயலகத்தில் அரச அதிபர் தலைமையில் அண்மையில் நடைபெற்றது. அக்கூட்டத்திலேயே மேற்படி நடவடிக்கைகள் குறித்து முடிவு எடுக்கப்பட்டது.

இதேவேளை — இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க கிளிநொச்சிக் கிளையின் உதவியுடன் தற்போது வாரத்தில் 3 நாட்கள் கிளிநொச்சி-கொழும்பு தபால் சேவை நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (த-1)

# ஆலயங்களில்

சுன்னாகம் அருள்மிகு மயிலணி கந்தசாமி கோயில் வருடாந்த சங்காபிஷேகம் நாளை வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறும். பகல் அன்னதானம் இடம்பெறும். (க-89)

o o o

நல்லூர் கந்தசுவாமி கோயில் மஹோற்சவ இறுதி நாளான இன்று வியாழக்கிழமை நாவலர் மணிமண்டப முன்றலில் இடம் பெறும் தெய்வீக இசை அரங்கில் திரு. கே. ஆர். நடராஜா இன்னிசை நடைபெறும்.

இன்றைய இசையரங்கில் தம்புரா, கடம், கெஞ்சிரா, முகர்சிங், தபேலா, வாத்தியக் கலைஞர்களும் கலந்து சிறப்பிப்பார்கள் (க-111)

o o o

யாழ். சிவானந்த குருகுலத்தினர் மாதாந்த ஆய்வுக் கருத்தரங்கும், கலந்துரையாடலும் சுதுமலை அம்மன் கோவிலில் இன்று வியாழன் மாலை 2 மணியளவில் நடைபெறும். துவஜாரோகணம் விடயம் பற்றி சிவஸ்ரீ இ. சுப்பிரமணியக் குருக்களும் பிரமஸ்ரீ வி. நாராயணசர்மாவும் கருத்துரைகள் வழங்குவர். (க-89)

# துர்க்கை அம்மன் ஆலய உற்சவம் இன்று ஆரம்பம்

தெல்லிப்பழை துர்க்கையம்மன் தேவஸ்தான மஹோற்சவம் இன்று முற்பகல் 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

தொடர்ந்து 12 தினங்கள் நடைபெறும். மஹோற்சவத்தின் 29ஆம் திகதி தேர்த் திருவிழாவும், மறுநாள் தீர்த்த திருவிழாவும் நடைபெறவிருக்கின்றன.

உற்சவ காலத்தில் பக்தி சூழலைப் பேணும் வகையில் பலவித ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

வலி-வடக்கு பிரதேச செயலர் அலுவலகமும், சுகாதார அலுவலகமும் அங்கு இயங்கி, பக்தர்களின் சுகாதார, போக்குவரத்து விடயங்களை கவனிக்கும்.

செஞ்சிலுவைச்சங்க காங்கேசன்துறைப்பிரிவு, செண் ஜோன்ஸ் அம்புலன்ஸ் பிரிவு ஆகியனவும் விசேட அலுவலகங்கள் திறந்து பக்தர்களுக்கு தேவையான உதவிகளை வழங்குவர்.

ஆலயச் சுற்றாடலில் அமைதியைப் பேணுமாறும், பக்தி சூழலை மாசுபடுத்தும் செயல்களில் ஈடுபடுவதை தவிர்க்குமாறும் தேவஸ்தானத்தினர் கேட்டுள்ளனர்.

## மாட்டுவண்டி சவாரி

சுன்னாகம் வர்த்தக சங்க ஆதரவில் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை பி.ப. 2 மணியளவில் கந்தரோடை மைதானத்தில் மாபெரும் மாட்டுவண்டி சவாரிப் போட்டி ஒன்று இடம்பெறவுள்ளது. (ஓ-89)


# பயிலுநர் தேவை

யாழ். நகரில் உள்ள பிரபல்யமான ஸ்ருடியோ ஒன்றிற்கு ஸ்ருடியோ வேலை பழக ஆர்வமுள்ள 15 — 20 வயதிற்குட்பட்ட ஆண்கள் மட்டும் விண்ணப்பிக்கவும்.

விண்ணப்ப முடிவு திகதி: 31 — 08 — 1993

மே / பா 914, உதயன்.

(சி-5668)



# சிறுவர் போசாக்கு பராமரிப்பு பூங்கா

யாழ். மாவட்டம்

## பொம்மைவெளி- யாழ்ப்பாணம்

## வெற்றிடங்கள்

மேற்படி நிலையத்திற்கு கீழ்க் குறிப்பிடப்படும் கடமைகளுக்குத் தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. நிலை: பராமரிப்பு நிலைய நிர்வாகி

தகைமைகள்:

1. ஓய்வுபெற்ற கணக்காளர், ஆசிரியர் அல்லது நிர்வாக சேவை உத்தியோகத்தர்
2. 40 — 50, வயதிற்கு இடைப்பட்ட ஆண்கள்
3. யாழ். நல்லூர்ப் பிரதேசத்திற்குட்பட்டவர்கள் மட்டும்

2. நிலை: ஆசிரியை

1. பாலர் பாடசாலை ஆசிரியர் பயிற்சி பெற்றவராக அல்லது 2 வருட அனுபவம் உடையவராக இருக்க வேண்டும்.
2. யாழ். நல்லூர் பிரதேசத்திற்குட்பட்டவர்கள் மட்டும்.

விண்ணப்ப முடிவு திகதி: 25 — 08 — 1993

அனுப்ப வேண்டிய முகவரி:

அரசியல்துறை,
யாழ். மாவட்டச் செயலகம்,
தமிழீழ விடுதலைப் புலிகள்,
கோண்டாவில்.

குறிப்பு:

1. கடித உறை இடது மூலையில் ''சிறுவர் போசாக்கு பராமரிப்புப் பூங்கா'' வெற்றிடம் எனக் குறிப்பிடவும்.
2. விண்ணப்பதாரிகள் 29-08-1993 காலை 10-00 மணிக்கு ஆவணங்களுடன் நேரில் சமூகமளிக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

— பொறுப்பாளர்.

(26989)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

இல. 16 கச்சேரி கிழக்கு ஒழுங்கையில் நான்கு பரப்புக் காணி வீட்டுடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: திருமதி து. கமலநாயகி, இல. 6, வில்வத்தெரு வீதி, யாழ்ப்பாணம். (26964)

எமது பண்ணையில் உள்ள 8ஆம் இலக்க பசுமாடு கூறுவிலை மூலம் விற்பனை செய்யப்படவுள்ளது. வாங்க விரும்புவர்கள் 23-8-93ஆம் திகதிக்கு முன்னர் கூறுவிலையைச் சமர்ப்பிக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். அலுவலக நேரத்தில் மாட்டைப் பார்வையிடலாம். பொதுமுகாமையாளர், யாழ். மாவட்ட அபிவிருத்திக்கூட்டுறவுச் சங்கம், திருநெல்வேலி, யாழ்ப்பாணம். (சி-5808)

புதிய முதிரை, பாலை நிலைகள், யன்னல்கள், பாலை திராந்திகள், முதிரை பலகைகள் நியாயமான விலைக்கு விற்பனைக்குண்டு. கு. வல்லிபுரம், இராமலிங்கம் வீதி, (முடமாவடி) திருநெல்வேலி கிழக்கு, யாழ்ப்பாணம். (26984)

புதிய கீபோட் ரெமிங்டன் தமிழ் தட்டச்சு இயந்திரம் விற்பனைக்குண்டு. தொடர்பு: G. R. மருதலிங்கம், 8/1, அம்மன் வீதி, சந்தர்மடம், யாழ்ப்பாணம். (26972)

## வெளிவந்துவிட்டது

9, 10, 11, ஆண்டுக்கான வர்த்தக வினா-விடைசொற்ப பிரதிகளே. ஆக்கம்: சறோஜா நல்லையா (ஆசிரியர் கலாசாலை பலாலி), 1000 வினாவும் - விடைகளும் உள்ள ஒரே புத்தகம். விலை 65/-. மக்மிலன் யாழ்ப்பாணம், ஸ்ரீகாந்த நல்லூர், புத்தகசாலைகள். (சி-5802)

## தேவை

சரசாலை கலைமகள் கல்வி நிலையத்திற்கு எழுதுவினைஞர் தேவை, G. C. E. O/L சித்தியடைந்தவர்கள் விண்ணப்பிக்கலாம். விண்ணப்பங்கள் நேரிலோ அல்லது கடிதமூலமோ 10-9-93க்கு முன்னர் அனுப்பி வைக்கவும். இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். (26985)

## தவறிவிட்டது

17-8-93 அன்று ஸ்ரான்லி வீதிக்கும் (ஸ்ரீதர் தியேட்டருக்கும்), மின்சார நிலைய வீதிக்கும் இடையில் ரூபா 2,500/- தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள். தயவுசெய்து D. திலீபன், 3371/1, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் ஒப்படைக்கவும். (6433)

## சனிநீராடு

உடலுக்குச் சிரசே பிரதானம். சிரமமான எண்ணெய் முழுக்கு உடலைச் சமநிலையில் வைத்திருக்கிறது. நம்முன்னோர் பாவித்து வந்த சரக்குகளைக்கொண்டு தயாரித்த ''ஒலிவ் கிறானப்பவுடர் பக்கற் விலை ரூபா 3/-. 25 பக்கற் கொண்டமட்டை ரூபா 60/-. ''மில்க்வைற்'' (சி-5592)

## இலவச திருமண சேவை

38 வயது, சித்திரை செவ்வாய் 12, சவுதியில் Electrician தொழில்புரிபவர் லீவில் யாழ். வந்துள்ளார். தகுந்த மணப்பெண் தேவை. மணமக்களுக்கு தொடர்பு ஞாயிறு காலையில். விமலா, இலவச திருமண சேவை, நாச்சிமார் கோவிலடி. (26962)

## பரீட்சை ஆண்டு 4

ஆண்டு 4ற்கு புலமைப்பரிசில் (1994 மாதாந்த தொடர் பரீட்சை 22-08-93 ஞாயிறு முற்பகல் 8-00, 11-00 நேரங்களில் நடைபெறும். மாணவரின் தர அடிப்படையில் வகுப்புகள் நடைபெறுகின்றன. புதிய கல்வி நிலையம், 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (26987)

---

கொக்குவில் கிழக்கு

## பொற்பதி விநாயகர் ஆலய

# அலங்கார உற்சவம்

**21 — 08 — 1993 - 31 — 08 — 1993**

தினமும் மாலை 6-30 — 7-30 மணி வரை சிவத்தமிழ் வித்தகர் திரு. சிவமகாலிங்கம் (B. A; Dip - in - Edu; விரிவுரையாளர் - பலாலி ஆசிரிய பயிற்சிக் கலாசாலை) அவர்களால் தெய்வீகச் சொற்பொழிவு நிகழ்த்தப்படும்.

20 — 08 — 1993 வெள்ளி
''சிவசக்தி வழிபாட்டின் சிறப்பு''
21 — 08 — 1993 சனி
''கணபதி கடாட்சம்''
22 — 08 — 1993 ஞாயிறு
''உதித்தனன் உலகம் உய்ய''
23 — 08 — 1993 திங்கள்
''குருவாய் வருவாய்''
24 — 08 — 1993 செவ்வாய்
''அல்லல் பிறவி அறுப்பானே''
25 — 08 — 1993 புதன்
''துணையில் பிணை நெஞ்சே''
26 — 08 — 1993 வியாழன்
''சித்தம் அழகியார்''
27 — 08 — 1993 வெள்ளி
''தெளிவுகுருவின் திருமேனி காண்டல்''
28 — 08 — 1993 சனி
''உள்ளம் பெரும் கோயில்''
29 — 08 — 1993 ஞாயிறு
''சிவசக்தி தானே''
30 — 08 — 1993 திங்கள்
''குறளும் மந்திரமும்''

தி. இராஜசேகரக் குருக்கள்
ஆலய குருக்களும், உரிமையாளரும்,

விளம்பர அன்பளிப்பு:
ராஜூ ஸ்ரோர்ஸ்,
யாழ்ப்பாணம்.
(6431)

---

# ஈவ்லின் இரட்ணம் பல்லினப் பண்பாட்டு ஆய்வு நிறுவனம்

ஆய்வுத் தொடரில்;

விடயம்: ''யாழ்ப்பாணப் பிரதேசத்தில் இருந்து இடம்பெற்ற சர்வதேசக் குடிபெயர்வு''

ஆய்வாளர்: திரு. எஸ். சத்தியசீலன் (சிரேஷ்ட விரிவுரையாளர், வரலாற்றுத்துறை) யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

தலைமை: திரு. பொ. அருந்தவநாதன் (விரிவுரையாளர், தமிழ்த்துறை) யாழ்ப்பாணக் கல்லூரி

இடம்: ஈவ்லின் இரட்ணம் பல்லினப் பண்பாட்டுக் கேப்போர் கூடம்

காலம்: இன்று (19 - 08 - 1993) வியாழக்கிழமை பிற்பகல் 3-30 மணி

★ அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம் ★

26 — 08 — 1993இல் இடம் பெறும் ஆய்வுத்தொடர்

விடயம்: 'சுதந்திர இலங்கையில் கல்வியில் மொழி'

ஆய்வாளர்: பேராசிரியர் வ. ஆறுமுகம் (கல்வியியல் துறைத் தலைவர்) யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

(5670) நிர்வாகி

---

# தமிழ் மா மன்றத்தின் பரிசளிப்பு விழா

நல்லைக் கந்தன் வருடாந்த மஹோற்சவத்தை முன்னிட்டு தமிழ் மா மன்றம் நடத்திய சமய அறிவுப் போட்டி தமிழ் மொழித் திறன் பரீட்சை தமிழ் மொழிப் பரிசில் ஆகியவற்றுக்கான பரிசளிப்பு விழா.

இடம்: நல்லை ஆதீன கலா மண்டபம்
காலம்: 19 — 08 — 1993 வியாழன் மாலை 4-30 மணி

சமய அறிவுப் போட்டியில் வெற்றி பெற்றோர்

தங்கப் பதக்கம் (369) செல்வி க. இராஜேஸ்வரி (வண்ணார் பண்ணை)

வெள்ளிப் பதக்கம் (376) செல்வி க. லலிதசொரூபினி (கொழும்புத்துறை)

வெண்கல பதக்கம் (512) ஸ்ரீ விஜிதா (கல்வியன்காடு)

ஆறுதல் பரிசு பெறுவோர்

| (1) | (2) |
|---|---|
| 502 இ. அனுசியா | 430 இ. தமிழினி |
| 503 மு. டுக்ஷன் | 041 வ. திலீபா |
| 501 ஞா. கவிதா | 427 த. ருசாந்த சுந்தரி |
| 465 வெ. ரூபஜெனனி | 415 மு. மயூரன் |
| 403 க. ஜெனிவா | 466 நா. சுகந்தி |
| 469 சி. சிவகலை | 518 ப. அகிலன் |

தமிழ் மொழித் திறன் பரீட்சையில் மூன்று பிரிவுகளில் முதல் மூன்று இடங்களையும் பெற்றவர்களுக்கும் தமிழ் மொழிப் பரிசிலில் பரீட்சையில் மாவட்டப் பரிசைப் பெற்ற த. ஜெயந்தி (யா/ இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை) இவர்களுக்கான பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கப்படும்.

- செயலாளர்.

இருபாலை. (26990)

---

# சித்ராலயாவில்...

மீண்டும் உங்களுக்குத் தேவையான போட்டோஸ்ரற் பிரதிகளை இப்போது பெறமுடியும்

## ★ சித்ராலயா ★

அருச்சுனா வீதி (ஸ்ரான்லி வீதி), யாழ்ப்பாணம்.

(சி-5667)

---

# 31ஆம் நாள் நினைவஞ்சலி

மலர்வு: 06 — 04 — 1944



உதிர்வு: 20 — 07 — 1993

திருமதி
## சதானந்தன் நாகேஸ்வரி (பபி)

என்னோடு நீயும் உன்னோடு நானும்
என்று வாழ்ந்த எமக்கு
என்னை விட்டு நீ பிரிந்த வேதனை
இது இறைவன் எனக்கு தந்த சோதனை
நீயில்லா வாழ்வில் எனக்கேது நிம்மதி
அன்பே உன் ஆத்ம சாந்திக்காக
இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

உன் நினைவில் வாழும்,
அன்புக் கணவன்.

106, செம்மணி றோட்,
நாவலர்மார்க்கட்டு,
நல்லூர். (6685)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்:

### படை திரட்டல் அவசரம்

ஸ்ரீலங்கா இராணுவத்தில், மேலும் பத்து காலாட்படை அணிகளை (பட்டாலியன்களை) சேர்த்துக் கொள்வதற்கு அரசாங்கம் முடிவு செய்திருப்பதாகச் செய்திகள் வெளிவந்துள்ளன.

போர் நடைபெற்றுவரும் கடந்த மூன்று வருடங்களிலும், விடுதலைப் புலிகளின் பெருந் தாக்குதல்களினால் தோல்வி ஏற்படும் போதெல்லாம், படைசார் உயர் அதிகாரிகள் தமது ஆட்பலமும், ஆயுத பலமும் போதாது என்று கூறுவது வழக்கமாகிவிட்டது.

அதன் பயனாக கடந்த மூன்று வருடங்களில் மட்டும் அரசாங்கப் படைகளின் ஆட்பலம், ஆயுதபலம் என்பன ஐந்து மடங்காக உயர்ந்து விட்டன. புதிய புதிய போர்த்தளபாடங்கள் கோடிக்கணக்கான பணச் செலவில் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன.

இராணுவத்தின் ஆட்பலம் போதாது என்ற முணுமுணுப்பு, போர் தொடங்கிய ஒரு வருடத்திற்குள்ளேயே, ரஞ்சன் விஜேரத்தனா பாதுகாப்பு அமைச்சராக இருந்தவேளையிலேயே ஆரம்பித்து விட்டது.

ஆனால் நூற்றுக் கணக்கான படையினரை பலிகொடுத்த புலிகளின் 1991 மணலாறுத் தாக்குதலின் பின்னர் இராணுவத்தை விட்டுச் சிப்பாய்கள் சொல்லாமல் கொள்ளாமல் ஓடத் தொடங்கினர். இவ்வாறாக எட்டாயிரத்துக்கும் மேற்பட்ட துருப்புகள் ஓடிப்போனதாக மதிப்பிடப்பட்டது. புதியவர்களைச் சேர்ப்பதற்கு நாலாந்தம், ஊரந்தம் என்று சிங்கள மாவட்டங்களில் நேர்முகப் பரீட்சைகள் நடத்தியும் வேண்டியவர்களை திரட்ட முடியவில்லை என்று படை உயர் அதிகாரிகள் ''அழுதார்கள்''!

அப்படியிருந்தும் இராணுவத்திற்கு மேலும் பத்துப் படை அணிகளை உருவாக்க பத்தாயிரம் பேரைச் சேர்த்துக் கொள்ள முடிவு செய்திருக்கின்றனர். யுத்தக் கைதிகளை விடுவிப்பதில் படை உயர் அதிகாரிகள் காட்டிவரும் மெத்தனப் போக்கின் பின்னர் அது சாத்தியமா என்பது கேள்விக்குரியதே. அது ஒரு புறமிருக்க;

படைகளின் ஆட்பலம் ஆயுத பலங்களை அதிகரிப்பதிலேயே அரசாங்கம் தனது சக்தியையும், நிதி வளங்களையும் பயன்படுத்துகிறது என்றால் அதன் அர்த்தம், உள்நோக்கம் என்ன?

தமிழர்களின் பிரச்சினையை இராணுவத் தீர்வு மூலமே முடிவுக்குக் கொண்டு வருவது என்பதில் அரசு மிகத் தீவிரமாகவும், நிலைமாறாமலும் இருக்கிறது. இராணுவத் தீர்வின் தளமான போர்க்களத்தில், தான் பலமுள்ளதாகக் காட்டிக் கொள்ளவும் வெல்லவும் வேண்டும் என்பதிலும் அரசு அக்கறையாக உள்ளது. அதாவது தமிழ் மக்களை அழித்தும் அவர்களது உடைமைகளைச் சேதமாக்கியும் விட்டால் பிரச்சினை தீர்ந்துவிடும் என எண்ணுகிறது.

தமிழர் பிரச்சினை ஐ. நா. வரை செல்லும் சூழ்நிலை கருக்கட்டி வருவதால், அப்படி ஒரு ''ஆபத்து'' வருவதற்கு முன்னர் போர்க்களத்தில் வென்றுவிட வேண்டும் என்று அவசரப்படுகிறது. அதற்காகவே அவசரமான படை திரட்டலும், இராணுவ நடவடிக்கைகளை தீவிரப்படுத்துதலும் நடக்கின்றன.

விமானங்கள் அடிக்கடி பறப்பதும், இரவில் ஓடுவதும் ஷெல் வீச்சு, பீரங்கித் தாக்கு என்பனவும் இராணுவ நடவடிக்கையை தீவிரப்படுத்தி வெற்றியைக் காட்டுவதற்கான முயற்சியின் சமிக்ஞைகளே. தாக்குதலுக்கு முன்னர் செயற்கையான நெருக்கடி நிலையை உருவாக்கும் தோற்றுவாயாகவும் இவற்றைக் கொள்ளலாம்.

## திரிபோஷா வந்து சேர்ந்தது

யாழ்ப்பாணம், ஆக. 19

வட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பகுதிக்கு திரிபோஷா மா கிடைக்கப் பெற்றுள்ளது.

அண்மையில் பருத்தித் துறைக்கு வந்த குமாரி கப்பல் மூலம் திரிபோஷா மா சுகாதாரத் திணைக்களத்தால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. நீண்ட நாட்களாக இம்மாவுக்கு தட்டுப்பாடு நிலவியது.

வடபிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பகுதியிலுள்ள அனைத்து சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளுக்கும் இந்த மாதற்போது பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (உ-162)

வடக்கு, கிழக்குக்கு இடைக்கால நிர்வாகம்

# தெரிவுக் குழுவில் நம்பிக்கை இல்லை அதனாலேயே அரசு புதிய முயற்சி!

### சு. கவின் எம். பி. கூறுகிறார்

கொழும்பு, ஆக. 19

இனப்பிரச்சினைத் தீர்வுக்கு தெரிவுக்குழுவினால் சமர்ப்பிக்கப்படக் கூடிய சிபார்சு குறித்து அரசுக்கு நம்பிக்கை இல்லை. அதனாலேயே வடக்கு - கிழக்கு மாகாண சபைக்கு இடைக்கால நிர்வாக சபை ஒன்றை அமைக்கும் புதிய முயற்சியில் அரசு ஈடுபடுகிறது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி எம். பியான எஸ். பி. திஸநாயக்கா இவ்வாறு கருத்து வெளியிட்டதாக செய்தி ஏஜென்ஸி ஒன்று தெரிவித்தது.

வடக்கில் இருக்கும் தீவிரவாதத்தை அடக்க தேசிய அரசப் பாணியிலான இடைக்கால நிர்வாக சபையை அமைக்க முற்படும் அரசு, தெற்கிலும் ஊழல் ஆட்சியை ஒழிக்க அதே போன்ற நடவடிக்கைக்குத் தயாராக வேண்டும்.

ஜனாதிபதி விஜேதுங்கவின் அரசு இராஜினாமச் செய்து அடுத்த ஜனாதிபதித் தேர்தல் வரை முழு நாட்டிற்குமே காபந்து அரசு அமைக்கப்பட வேண்டும்.

ஐ. தே. க அரசுதான் ஆட்சியில் இருந்து கொண்டு வடக்கு - கிழக்கில் தேசிய அரசு அமைக்க முயலுவதும், அதற்கு சகல கட்சிகளையும் ஆதரவு கேட்பதும் வேடிக்கூத்தானதாகும்.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண நியமிக்கப்பட்ட நாடாளுமன்றத் தெரிவுக்குழு தனது அறிக்கையை இன்னும் வெளியிடவில்லை. இந்நிலையில் வடக்கு - கிழக்குக்கு இடைக்கால நிர்வாகம் குறித்து அரசு ஊக்கம் காட்டுவது அரசுக்கு தெரிவுக்குழுவின் சிபாரிசுகளில் நம்பிக்கை இல்லை என்பதையே காட்டுகின்றது. (உ-6)

## சிறுவர் போசாக்குக்கு உதவி கனடா நிறுவனம் வழங்கும்

யாழ்ப்பாணம், ஆக. 19

யாழ் மாவட்டத்தில் போசாக்கின்றிப் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு உதவி வழங்க கனடா கிறிஸ்தவ சிறுவர் நிதியம் முன்வந்துள்ளது.

கடந்த வாரம் யாழ்ப்பாணம் வந்திருந்த இந்த நிதியத்தின் அதிகாரியான வெஸ்லி கொலின்ஸ் இங்கு அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையப் பிரதிநிதிகளுடன் பேச்சுக்கள் நடத்தினார்.

யாழ். மாவட்டத்தில் யுத்தத்தின் காரணமாக போசாக்கு பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கு உடனடி உதவியாக நிவாரணத் திட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்துவது தொடர்பாக இந்த அமைப்பின் பிரதிநிதி இங்கு ஆராய்ந்தார். (உ-3)

## பார்வை இழந்தோருக்கு உதவ நவீன சப்பாத்து

### மலேசியாவில் கண்டுபிடிப்பு

கண்பார்வை இழந்தவர்கள் நடக்கும் போது அவர்களுக்கு உதவக் கூடிய விசேட சப்பாத்துக்களை மலேசியாவின் கல்லூரி மாணவர்கள் இருவர் தயாரித்துள்ளனர்.

சமீபத்தில் அங்கு இடம்பெற்ற வர்த்தகக் கண்காட்சி ஒன்றில் இத்தகைய சப்பாத்துக்கள் முதல் தடவையாக வைக்கப்பட்டிருந்தன.

இந்த சப்பாத்துக்களை அணிந்து நடப்பவர் முன்னால் தடை ஏற்படும் போது அதனை அறிந்து கொள்ள முடிகிறது.

தடை ஏற்படும் போது சப்பாத்தின் முன் பகுதியில் பொருத்தப்பட்டுள்ள கருவி ஒன்று ஒலி மூலம் சமிக்ஞை ஏற்படுத்துகின்றது. இதற்காக சப்பாத்தின் அடிப்பகுதியிலும் கருவிகள் பொருத்தப்பட்டுள்ளன.

இத்தகைய ஒரு சோடி சப்பாத்துக்கு 700 மலேசிய டொலர்கள் செலவாகி இருப்பதாகவும் —

இது போன்ற சப்பாத்துக்களை அதிக எண்ணிக்கையில் தயாரிக்க மலேசியாவில் உள்ள பல நிறுவனங்கள் முன்வந்திருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (இ-162)

## 6,000 பட்டதாரி பயிலுநர் ஆசிரியருக்கு நிரந்தரம்

ஒரு வருட காலம் திருப்திகரமான சேவையைப் பூர்த்தி செய்த பட்டதாரி பயிலுநர் ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனமும் பட்டதாரி சம்பளமும் வழங்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இதன் கீழ் அடுத்த ஆண்டில் 6 ஆயிரம் பேருக்கு நிரந்தர நியமனம் வழங்கப்படும்.

ஜனாதிபதியின் உத்தரவின் பேரில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டதாக கல்விச் சேவைகள் ஆணைக் குழுவின் தலைவர் ஜோர்ஜ் மெண்டிஸ் ரூபவாஹினிக்குத் தெரிவித்தார்.

1989ஆம் ஆண்டில் நியமிக்கப்பட்ட 6 ஆயிரம் பட்டதாரி பயிலுநர் ஆசிரியர்கள் ஏற்கனவே சேவையில் நிரந்தரமாக்கப்பட்டுள்ளார்கள். இவர்களுக்கு பட்டதாரி சம்பளம் வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாக அவர் மேலும் கூறினார்.

பட்டதாரி ஆசிரியர்களின் சம்பள அதிகரிப்புக்காக 7 கோடி ரூபாவை ஒதுக்குமாறு திறைசேரி கோரப்பட்டுள்ளது.

அரச ஊழியர் அனுபவிக்கும் சலுகைகளை நிரந்தர நியமனம் பெறும் பட்டதாரி பயிலுநர் ஆசிரியர்களும் அனுபவிப்பர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-162)

பருத்தித்துறையில்

## துறைமுக விபத்தில் பலியான தொழிலாளிக்கு நஷ்டஈடு

வடமராட்சி, ஆக. 19

பருத்தித்துறை இறங்கு துறையில் பொருள்கள் இறக்கும் பணியில் ஈடுபட்டிருந்த வேளை விபத்தில் பலியான தொழிலாளியின் குடும்பத்துக்கு உடுப்பிட்டி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் 50 ஆயிரம் ரூபாவை வழங்க முன்வந்துள்ளது.

தொண்டமானாற்றைச் சேர்ந்த ஆறுமுகம் சிவபாலன் என்ற—விபத்தில் பலியான—இத்தொழிலாளியின் குடும்பத்துக்கே இந்த நஷ்டஈடு வழங்கப்படவுள்ளது.

முதற்கட்டமாக குறிப்பிட்ட தொழிலாளியின் குடும்பத்துக்கு ஏற்கனவே 10 ஆயிரம் ரூபாய் வழங்கப்பட்டுள்ளது. மிகுதி 40 ஆயிரம் ரூபா விரைவில் வழங்கப்படவுள்ளதாக சங்கத் தலைவர் திரு. கணபதிப்பிள்ளை தெரிவித்தார். (உ-173)

## பயங்கரவாத நாடாக சூடான்!

அமெரிக்க ராஜாங்க அமைச்சு சூடானையும் பயங்கரவாதத்தில் ஈடுபடும் நாடுகளில் ஒன்றாகச் சேர்க்கத் தீர்மானித்துள்ளது.

அமெரிக்க ராஜாங்க அமைச்சர் வாரென் கிறிஸ்தோபர் இத்தகைய உத்தரவு ஒன்றைக் கடந்தவார இறுதியில் கையெழுத்திட்டார்.

ஐ.நா. சபையில் உள்ள சூடான்நாட்டு ராஜதந்திரிகள் ஐ நா. கட்டிடத்தையும் அமெரிக்க எவ் பி ஐ. தலைமை அலுவலகத்தையும் இரண்டு சுரங்கப் பாதைகளையும் குண்டு வைத்து தகர்க்க முயற்சித்தார்கள் என்ற குற்றச்சாட்டிலேயே சூடானுக்கு 'நாட்டுப் பயங்கரவாதம்'' என்ற பட்டம் அமெரிக்காவால் சூட்டப்பட்டுள்ளது.

லிபியா, ஈரான், ஈராக், சிரியா ஆகிய நாடுகளுக்கு ஏற்கனவே அமெரிக்கா இந்தப் பட்டத்தையும் சூட்டியுள்ளது.

## சைக்கிள் திருட்டு

தென்மராட்சி, ஆக. 19

தென்மராட்சிப் பகுதியில் சைக்கிள் திருட்டு மீண்டும் அதிகரித்துள்ளது. நேற்று முன்தினம் மட்டும் கைதடி மட்டுவில், சங்கத்தானை ஆகிய இடங்களில் மூன்று சைக்கிள்கள் திருட்டுப் போயுள்ளதாக சாவகச்சேரி காவல் நிலையத்தில் முறையிடப்பட்டுள்ளது ]உ-117]

உ



## எமைக்காக்க வேண்டுமையா

கொடியவர்கள் கொட்டத்தை அடக்கிடவே
கூரான வேலங்கே போனதையா
அடியார்கள் படுந்துயரம் அறிந்த நீயும்
ஆண்டியாக எங்கேதான் சென்றாயையா
வடிவான உன்கோலம் காணவென்றே
வந்திந்த நல்லூரில் கூடுகின்றோம்
விடிவொன்று தந்திடவே வேலாநீ
விரைந்துவந்து எமைக்காக்க வேண்டுமையா

— வ. யோகானந்தசிவம்

## மரத்தை மனிதன் வாழவிட்டால் மரம் மனிதனை வாழவைக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீரப்பன் கும்பலை சேர்ந்த அறுவர் சுட்டுக் கொலை!

பெங்களூர், ஆக. 19

சந்தன மரக்கடத்தல்காரன் வீரப்பன் கும்பலைச் சேர்ந்த சிலருக்கும் கர்நாடக அதிரடிப் படையினருக்கும் இடையே நேற்றுக் காலை கர்நாடகத்தின் மஞ்சள் மலை வனப் பகுதியில் இடம் பெற்ற துப்பாக்கிச் சண்டையில் வீரப்பன் கும்பலைச் சேர்ந்த 6 பேர் கொல்லப்பட்டனர். மூவர் காயமடைந்தனர். (இ-எ)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி அன்னரத்தினம்மா விஸ்வநாதக்குருக்கள்

கல்வளை சண்டிலிப்பாயைச் சேர்ந்த கல்வளை விநாயகர் தேவஸ்தான முன்னாள் பிரதமகுரு பிரம்மஸ்ரீ சுப்பையாக்குருக்கள் - ஸ்ரீமதி இராசம்மா ஆகியோரின் புத்திரியும், சுழிபுரம் - குடியிருப்பு பிரம்மஸ்ரீ சோ. விஸ்வநாதக்குருக்களின் அன்பு மனைவியுமாகிய திருமதி அன்னரத்தினம்மா விஸ்வநாதக்குருக்கள் 18 - 8 - 1993 இல் காலமானார்.

அன்னார் விவேகானந்தசர்மா (முகாமையாளர், இலங்கை வங்கி - வடபிரசாந்தியக் காரியாலயம், கொழும்பு), விஜயானந்தசர்மா (சுவிற்சர்லாந்து), நகுலேஸ்வரசர்மா (கனடா), பரமேஸ்வரசர்மா (ஆசிரியர் / சன்மார்க்க மகாவித்தியாலயம், யாழ்ப்பாணம்), விக்னேஸ்வரசர்மா [கொழும்பு], கணேஸ்வரசர்மா (பிரான்ஸ்), ஞானேஸ்வரி, புஸ்பராணி [சுவிற்சர்லாந்து], சர்வேஸ்வரி, மங்களேஸ்வரி ஆகியோரின் அன்புத்தாயாரும், பிரம்மஸ்ரீ இ. சபாரத்தினக்குருக்கள் (பன்னாலை, வரத்தலம் கற்பக விநாயக தேவஸ்தான பிரதம குருவும், இளைப்பாறிய அதிபரும்), ச. கணபதீஸ்வரசர்மா (சுவிற்சர்லாந்து), சோ. சிவகடாட்சசர்மா (இளைப்பாறிய மாவட்டத் தொலைத் தொடர்புப் பரிசோதகர்), சரஸ்வதி, பிரேமாவதி [கனடா], நாகபூசணி, அமிர்தகலா, பரமேஸ்வரி ஆகியோரின் அன்பு மாமியாரும், மயூரநாதன், தினேஷ், ஹரீஷ், திருமதி லலிதா சிவானந்தன், கணேஷானந்தசர்மா [யாழ். பல்கலைக்கழக, மருத்துவபீட இறுதியாண்டு மாணவன்), சுஜேந்தினி, முகுந்தன், காயத்திரி, சுஜேந்திரசர்மா, சிவசுதன், சுமுகன், சிவானந்தசர்மா (ஹட்டன் நஷனல் வங்கி, யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், ஷர்மினி, சபேசன் ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19 - 8 - 93) வியாழக்கிழமை காலை 10.00 மணிக்கு இல 197/1, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் இல்லத்தில் நடைபெற்று, தகனக்கிரியைகள் கோம்பையன் மணல் மயானத்தில் நடைபெறும். உறவினர்களும் நண்பர்களும் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

தகவல்:
வி. பரமேஸ்வரசர்மா
[மகன்]

197/1, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.
(26991)

## வைத்தியகலாநிதி வி. பாலகிருஷ்ணன்

தொல்புரத்தைச் சேர்ந்த வைத்தியகலாநிதி வி. பாலகிருஷ்ணன் (சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி - யாழ்ப்பாணம் மத்தியகல்லூரி ஆகியவற்றின் பழைய மாணவராவார்) 17 - 8 - 93 செவ்வாய்க்கிழமை காலை மோட்டார் கார் விபத்தில் மலேசியா கோலாலம்பூரில் அகால மரணமானார்.

இவர் வைத்தியகலாநிதி விசுவநாதன் பிள்ளையா (குழுவான்) - வள்ளியம்மை ஆகியோரின் அருமை மகனும், சிவநேசத்தின் (அதிபர், உயர்கல்வி மெதடிஸ் கல்லூரி) அன்புக் கணவரும், விசுவநாதன் (மருத்துவ பீட மாணவன்), மகாலட்சுமி, விக்கினேஸ்வரன் ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற மகாலட்சுமி, திருமதி இராசநாயகம், லோகாம்பிகை ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்ற க. பாலசுப்பிரமணியம், வைத்தியகலாநிதி ஆ. இராசநாயகம் ஆகியோரின் அருமை மைத்துனருமாவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் கோலாலம்பூரில் நேற்று (18 - 8 - 93) நடைபெற்றன.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
டாக்டர் ஆ. இராசநாயகம்

"ஸ்ரீரங்க வாசம்",
தொல்புரம் மேற்கு,
சுழிபுரம்.
(26986)

# நாளை

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை, பண்பாட்டுப் பேரவை தொண்டமனாறு ஸ்ரீ செல்வச்சந்நிதி முருகன் ஆலயத்தில் நடத்தும் வாராந்த நிகழ்வுகளில் நாளை வெள்ளிக்கிழமை மாலை 8 மணிக்கு திரு. க. துரைராசா, திரு. செ. ஆனந்தராசா, திரு. சி. திவ்வியநாயகம், திரு. சு. பட்டு ஆகியோரின் மேளக்கச்சேரி நடைபெறும். (க)

o o o

பருத்தித்துறை மாதனை சிறுவர் பாடசாலையில் நாளை வெள்ளிக்கிழமை மாலை 4-30 மணிக்கு விவேகானந்தர் சிக்காகோ சொற்பொழிவின் நூற்றாண்டு நிகழ்ச்சியாக சுவாமி சித்ரூபானந்தாவின் "சிறுவர்களது சுவாமி விவேகானந்தர்" என்ற சிறப்புச் சொற்பொழிவு இடம்பெறும்.

டாக்டர் க. சௌந்தரராசா தலைமையில் நடைபெறும் இந்நிகழ்ச்சியில் பாடசாலை சிறுவர்களுக்குத் தைத்த ஆடை அன்பளிப்புச் செய்யப்படும். (க)

# விளையாட்டு நிகழ்வுகள்

ஒன்பது பேர் கொண்ட உதைபந்தாட்ட அணிகளுக்கிடையில் யாழ் புனித அடைக்கல மரியான் விளையாட்டுக் கழகம் நடத்திவரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் அரையிறுதியாட்டம் ஒன்றும், காட்சியாட்டம் ஒன்றும் இன்று பிற்பகல் 3.30 மணி முதல் யாழ் மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளன.

இன்றைய ஆட்டத்தில் திவகம் அம்பாள் வி. க. அணியை எதிர்த்து நாவாந்துறை சென் மேரிஸ் வி. க. "பி" அணியும்—

நாவாந்துறை சென். மேரிஸ் "ஏ" அணியை எதிர்த்து பாஷையூர் சென். அன்ரனீஸ் அணியும் மோதவுள்ளன.

## மன்னாரில் ..

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

இராணுவ முகாம்கள், மினி முகாம்கள், காவலரண்கள் என்பனவற்றில் இருந்து படையினர் ஏற்கெனவே பின்வாங்கிச் சென்றது தெரிந்ததே.

## வடக்கு கிழக்கு...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

இந்த ஆலோசனையை அரசு முன்வைப்பதற்கு பின்னணியில் இருந்திருக்கலாம் என சில எதிர்க் கட்சிக் குழுக்கள் அபிப்பிராயம் வெளியிட்டன.

தேசிய அரசுத் தோற்றத்தின் அமைப்பில் வடக்கு—கிழக்குக்கு சகல கட்சிகளையும் பிரதிநிதித்துவப் படுத்தும் — 15 உறுப்பினர்களுக்கு மேற்படாத — அங்கத்தவர்களைக் கொண்ட இடைக்கால நிர்வாக அமைப்பு ஒன்றை நியமிப்பதற்கே தற்போது ஆலோசனை தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

இதனிடையில்—

வடக்கு—கிழக்கு மாகாணத்தில் மீண்டும் மாகாண சபையை இடைக்கால நிர்வாகமாக நிறுவ வேண்டும் என்று தாம் அரசைக் கேட்டுக் கொண்டிருப்பதாக ஈ.பி.டி.பி. தலைவர் டக்ளஸ் [illegible] (உ-எ)

# யாழ்ப்பாணத்திலும் பசுமை சிலுவை கிளை

## சர்வதேச தொண்டர் நிறுவனம்

யாழ்ப்பாணம், ஆக. 19

சர்வதேச பசுமைச் சிலுவை நிறுவனத்தின் தேசியக் கிளை இலங்கையிலும் நிறுவப்பட உள்ளது. இந்தக் கிளையை நிறுவுவதற்கான முழுப்பொறுப்பும், தென் கிழக்காசிய சுற்றாடல் அபிவிருத்தி நிலையத்தின் தலைவர் கலாநிதி நகுலேஸ் கதிர்காமநாதனிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

சர்வதேச பசுமைச் சிலுவை நிறுவனமானது சர்வதேச சாசனத்துடன் கூடியதும், ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் கீழ் இணைக்கப்பட்டதுமான சுற்றாடல் பாதுகாப்புத் தொண்டர் நிறுவனமாகும். அந்த நிறுவனத்தின் ஜெனிவா தலைமை அலுவலகம் இலங்கையின் அதன் கிளையை அமைப்பதற்கான ஆணையை கலாநிதி கதிர்காமநாதனுக்கு நேரடியாக அனுப்பி வைத்திருக்கிறது.

கடந்த வருடம் ஜூன் மாதம் ரியோவில் நடைபெற்ற சுற்றாடல் அபிவிருத்தி சம்பந்தமான ஐ. நா. மாநாட்டில் மேற்கொள்ளப்பட்ட "நிகழ்ச்சி - 27" திட்டத்தை உலகளாவிய ரீதியில் செயற்படுத்துவதற்காகவே சர்வதேச பசுமைச் சிலுவை (International Green Cross) நிறுவனம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதன் இயக்குநர்களாக முன்னாள் சோவியத் யூனியனின் ஜனாதிபதி கோர்பச்சேவ், ஐ. நாவின் முன்னாள் செயலாளர் நாயகம் பெரெஸ் டி குயிலர், ஜப்பானின் முன்னாள் பிரதமர் ரொஸ்கி கைபு, சர்வதேச சுற்றாடல் நிபுணரான கலாநிதி வங்காரி மாத்தாய், சர்வதேச, உலகப் புகழ்பெற்ற விவசாய நிபுணர் கலாநிதி எம். சுவாமிநாதன் ஆகியோர் உட்பட 21 பேர் பணிபுரிகிறார்கள். இவர்களில் பலரும் உலக நாடுகளின் முன்னாள் தலைவர்களும் அமைச்சர்களும் ஆவர்.

சர்வதேச, தேசிய, பிராந்திய மட்டத்தில் ஏற்படும் சுற்றாடல் பாதிப்புகளை உடனுக்குடன் ஆராய்ந்து தடுப்பு நடவடிக்கைகளை எடுக்கும் விதத்தில் சர்வதேச பசுமைச் சிலுவை நிறுவனத்தின் பணிகள் அமையும். உதாரணமாக கிணற்றுத் தண்ணீரினால் ஆபத்தான தொற்று நோய் பரவுவது தெரிந்ததும் பிரதேச மட்டத்தில் உள்ள ச. ப. சிலுவை நிறுவனம் உடனடியாகப் பாதிக்கப்பட்டோருக்கு உதவுவதிலும் தடுப்பு நடவடிக்கையிலும் ஈடுபடும்.

சுற்றாடல் பாதுகாப்புடன் சம்பந்தப்பட்ட பல சர்வதேச நிறுவனங்களில் அங்கம் வகிக்கும் கலாநிதி நகுலேஸ் கதிர்காமநாதன் ஐக்கிய நாடுகள் சபையின் சுற்றாடல் திட்டத்தின் தென்கிழக்காசியாவுக்கான இயக்குநராகவும் பணிபுரிகிறார்.

யாழ்ப்பாணத்தில் சர்வதேச பசுமைச் சிலுவை நிறுவனத்தின் பிரிவு ஒன்றை ஆரம்பிக்க உள்ளதாகவும்—

அந்தப் பிரிவில் கல்விமான்கள், பத்திரிகையாளர்கள், சுற்றாடலைப் பேணுவதில் அக்கறையுள்ள பொதுமக்கள், க. பொ. த. சாதாரண, உயர் வகுப்பு மாணவர்கள் அங்கத்தவர்களாகச் சேரலாம் என்றும்—

அவர்கள் தமது விண்ணப்பங்களை த. பெ. எண் 132, யாழ்ப்பாணம் என்ற விலாசத்துக்கு அனுப்ப வேண்டும் என்றும்— ஐ. நா. சங்க யாழ் பிரிவு வட்டாரங்கள் உதயனுக்குத் தெரிவித்தன.

# குட்டிப் பத்திரிகைகளால் அரசுக்கு அபகீர்த்தியாம்

கொழும்பு, ஆக. 19

தென் இலங்கையில் பிரசுரமாகும் சிறிய அளவிலான வாரப்பத்திரிகைகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்னாள் ஜனாதிபதி பிரேமதாஸாவின் மறைவின் பின்னர் இந்த ரகப் பத்திரிகைகளின் எண்ணிக்கை 30 இல் இருந்து 60 ஆக அதிகரித்துள்ளதாக உபசபாநாயகர் காமினி பொன்சேகா தெரிவித்திருக்கிறார்.

அரசாங்கத்தை அவமரியாதை செய்யும் நோக்குடன் திட்டமிட்டு செயல்படுத்தப்படும் திட்டத்தின் ஒரு பகுதியாகவே இப்பத்திரிகைகள் வெளியிடப்படுவதாக பொலிஸ் விசாரணைகளில் தெரியவந்திருப்பதாக சண்டே ரைம்ஸ் தெரிவித்திருக்கிறது. (இ-எ)

## கைதிகள்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக்குழு ஊடாக அனைத்து முயற்சிகளையும் எடுத்து வருகின்றது.

அரசின் காவலில் உள்ள விடுதலைப் புலிகளை, விடுதலைப் புலிகளின் காவலில் உள்ள யுத்தக் கைதிகளுக்காக பரிமாற்றம் செய்து கொள்வத் தயாராக இருப்பதாக கூட்டுப்படைகள் கட்டளைப் பீடம் தெரிவித்த யோசனை குறித்து விடுதலைப் புலிகளிடம் இருந்து இன்னும் பதில் கிடைக்கவில்லை.

செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவின் செயல்பாடுகள் பற்றி அரசு அவதானமாக இருந்து வருகின்றது. உள்நாட்டுப் பாதுகாப்புக்கு குந்தகம் விளைக்கும் விதத்தில் இக்குழு எவ்விதத்திலும் நடந்து கொள்ளவில்லை. அப்படி நடந்து கொண்டதற்கான சாட்சியங்களும் இல்லை. — என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்தார். (உ-எ)

## யாழ். நகரக்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஷெல்களினால் காயமடைந்த நால்வர் வருமாறு:-

சந்திரசேகரன் ஜெகதீஸ்வரி (வயது 30), லக்ஷ்மன் (வயது 6), பொன்னுத்துரை சிவகுமார் (வயது 18), பசுபதி பிரேமகுமாரி (வயது 23).

காயமடைந்தவர்கள் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (இ-162-17-51-5-3-15)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 328/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 19-08-1993 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org